# குளத்தில் மிதக்கும் தீபங்கள்

## ஆரிசன்

ஆசா பதிப்பகம்

**குளத்தில் மிதக்கும் தீபங்கள்**
*(ஹைக்கூ கவிதைகள்)*
*ஆரிசன்©*

*முதல் பதிப்பு: டிசம்பர் 2002*
*இரண்டாம் பதிப்பு: ஜனவரி 2016*
*மூன்றாம் பதிப்பு: டிசம்பர் 2025*

*வெளியீடு:*
*ஆசா பதிப்பகம்.*
*1126/2 எம்.ஜி.ஆர். நகர்,*
*கீழ்க்கொடுங்காலூர்,*
*வந்தவாசி வட்டம்-604403*
*திருவண்ணாமலை மாவட்டம்.*
*செல் :7338988418, 9442311118*

*புத்தக வடிவமைப்பு: ஜீ. முருகன்*

*ISBN: 978-93-5655-786-4*

*பக்கங்கள்: 74*
*விலை: ரூ.100*

## சமர்ப்பணம்

*''மண்ணை விட்டு மறைந்தும்*
*எப்போதும்...*
*யோசிக்கவும்...*
*நேசிக்கவும் வைக்கும்*
*அழியாத*
*மானுடப் புத்தகம்*
*தமிழ்நாடு*
*மின் ஊழியர் மத்திய அமைப்பின்*
*தலைவர்''*

***து.ஜானகிராமன்*** *அவர்களுக்கு...*

***நன்றி...***

ஹைக்கூ கவிதை இதழ்
செம்மலர்
கவிதை உறவு
அருவி
தீக்கதிர்.
இலக்கியச்சோலை
வண்ணக்கதிர்
மின்கதிர்
தமுஎகச- திண்ணை, வந்தவாசி
தினத்தந்தி - குடும்பமலர்

# கோபுரத்தில் ஏற்ற வேண்டிய தீபங்கள்..

*ஆரிசன் சமூக அக்கறை மிகுந்த சகோதரர் அப்பழுக்கற்றவர்: அழுக்குகளை, அழுக்கானவர்களைக் கண்டு அருவருப்பு அடைபவர். அவர் உள்ளத்திலிருந்து ஹைக்கூக் கவிதைகள் பிறந்தால் கேட்கவும் வேண்டுமா? அத்தனையும் முத்துக்கள். நாட்டில் நல்லனவற்றை விளைவிக்க வேண்டி விதைக்கப்படும் வித்துக்கள்.*

**"அமைதியான பிள்ளையார்**
**விரும்பாத விளையாட்டு**
**கரைக்கிறார்கள் கரையாதவர்கள்".**

*விரும்பாத விளையாட்டு மட்டுமல்ல; இது விபரீத விளையாட்டும் கூட. மத வெறியர்களின் மண்டைகளை யார் மாற்றுவது? எப்போது மாற்றுவது? ஆரிசனைப் போன்று ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர்கள் விழிப்புணர்வு பெற்றால் மிக எளிதில் மாற்றலாம்? அதற்காகத்தான் இந்த 'ஹைக்கூ' விதைப்போ?*

**'முள்வேலிக்காடு முழுவதும்**
**முடைநாற்றம்**
**கழிப்பறைக் கனவில் கிராமங்கள்'**

*விடுதலை பெற்று 54 ஆண்டுகள் ஆகியும் சுகாதாரத்தைக் கற்றுக் கொடுக்காத, சுகாதாரவாழ்க்கைக்கு வழிகாட்டாத அரசியல்வாதிகளின் முடை நாற்றம் தான் இந்த கிராமத்து முடை நாற்றம் இனியும் இவர்களை நம்பி வீணாவதா? இளைஞர் உலகம் சிந்திக்க வேண்டும். இந்த உள்ளத்திற்குள் இயற்கையை ரசிக்கும் இனிமையும் பொங்கி வழிகிறதே! இவரென்ன நீரும்*

*நெருப்பும் கலந்த கலவையோ?*

**'ஆ... திறந்து தாயின்**
**கன்னத்தைக் கோதும் குழந்தை**
**மலரை வருடும் தளிர்.'**

*இதுமாதிரிப் பாசத்தின் நெகிழ்ச்சியும் உண்டு. பாமரத்தனத்தின் மீது சாடலும் உண்டு பசுமைக் கிராமத்தின் வாசமும் உண்டு. இப்படி யொரு வித்தியாசமான படைப்பே ஆரிசனின் இந்த அற்புதமான ஹைக்கூக் படைப்பு. கோபுரத்தின் மீது ஏற்ற வேண்டிய தீபங்கள் போன்று சுடர்விடும் கவிதைத் தொகுப்புக்குக் 'குளத்தில் மிதக்கும் தீபங்கள்' என்று தலைப்புக் கொடுத்திருப்பது கூட ஆரிசனின் அடக்கத்தின் வெளிப்பாடோ?*

*பாராட்ட வேண்டிய படைப்பு நெஞ்சார்ந்த பாராட்டுக்கள். படித்துப் பயன்பெற வேண்டியது பைந்தமிழ் இளைஞர்களின் கடமை.*


பதினாறு கவனகர்

**இரா.கனகசுப்புரத்தினம்.**

*4,இராகத் குடியிருப்பு,*
*3/479,கஜுரா தோட்டம், 2வது தெரு,*
*நீலாங்கரை-சென்னை-78*

# குற்றாலக் கவிச்சாரலில் நனைய...

*ஆங்கில இலக்கியத்தில் ஷெல்லி, பைரன், வேர்ட்ஸ்ஒர்த் போன்ற கவிஞர்கள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைச் சார்ந்தவர்கள். ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம். இதில் வேர்ட்ஸ்ஒர்த் இயற்கையின் அழகில் கிறங்கிப் போனவன். இயற்கைதான் அவனுக்கு எல்லாம். இயற்கை தான் கடவுள். இந்த இயற்கை பாரதியை, பாரதிதாசனை மிகவும் ஈர்த்திருக்கிறது. பொதுவாக மரபுக் கவிதைகளில் இயற்கைக்குக் கிடைக்கும் முக்கியத்துவம் புதுக்கவிதையில், ஹைக்கூ கவிதையில், கிடைப்பதில்லை என்று பலரும் புகார் சொல்வார்கள். அந்தப் புகாருக்குப் பதிலாக வந்திருக்கிறது ஆரிசனின் ஹைக்கூக் கவிதைகள்.*

*இயற்கை, கிராமம், குளம், தண்ணீர், குடிசை, மழை, பூச்சிகள், கொசு,கடல்,நிலா,சூரியன், மீன்கள், மீனவன், மலைகள், பூக்கள் இவைகள் எல்லாம் பாக்கள் முழுவதும் பாட்டிசைக்கின்றன. கடவுள்களில் கவிஞரின் தனி 'கவனிப்பைப்' பிள்ளையார் பெறுகிறார். அவர் திருமணம் செய்து கொள்ளாதது கவிஞரின் ஏளனத்துக்கு உரியதாகிவிட்டது.*

***"குளத்து நிறையப் பூக்கள்***
***சூடுவார் இன்றி***
***வேடிக்கை பார்க்கும் பிள்ளையார்"***

*இன்னொரு பாடல்,*

***"சாதுவான பிள்ளையார்***
***சமிக்ஞை காட்டி காதல்***
***குளம் முழுவதும் வெட்கத்தில் மலர்கள்"***

ஒரு முறை மலர்கள் வெட்கப்பட்டால் அடுத்த முறை பிள்ளையார் வெட்கப்படுகிறார்.

**“பார்த்து ரசிக்கத்தான் முடிகிறது.**
**குளம் நிறைய பூக்கள்**
**பிள்ளையாரும் வெட்கத்தில்”**

இத்தொகுப்பில் என்னை அசர வைத்த கவிதை எது தெரியுமா? அது இதுதான்!

**“கிளியின் பேச்சை**
**மொழி பெயர்த்தது**
**மழலை”.**

இந்தக் கவிதையின் “ஆன்மாவை” வார்த்தைகளால் விளக்க முடியாது. அனுபவித்தே தான் உணர வேண்டும். சிலவற்றை அறிய வேண்டும்! சிலவற்றை உணர வேண்டும்! இந்த வரிகள் உணரப்பட வேண்டியவை. இன்னொரு கிளியும் இக்கவிதைத் தொகுப்பில் உண்டு.

**“சுதந்திர மனிதனுக்கு**
**ஜோதிடம் சொன்னது**
**கூண்டுக் கிளி”**

**“குருவித் தலையில்**
**பனங்காய்**
**வானம் சுமக்கும் நிலா’.**

கவிஞர் அமாவாசை இருட்டையும் விடவில்லை. அமாவாசையைப் பற்றி சரித்திர நாவலாசிரியர்கள் தான் அதிகம் சொல்வார்கள். இவர் இப்படிச் சொல்கிறார்

**“நிலாவையும்**
**சிறை வைத்தது**
**அமாவாசை இருட்டு”**

இயற்கையின் இனிமை மழையில் முழுவதும் நனைந்த கவிஞர் சமூகத்தையும் பார்க்காமல் இல்லை. அதையும் இயற்கையின் பின்னணியில் பார்க்கிறார்.இதுதான் இவரின் தனிச் சிறப்பு.

**“சேற்றில் முளைத்த செந்தாமரை**
**சூடிக் கொண்ட கலைமகள்**
**தீண்டாமை ஒழிந்த மலர்கள்”**

*இன்று முன்னுக்கு வரும் ஒரு பிரச்சினையை கவிஞர் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் சொல்கிறார்.*

**“கனி தரும் மரங்களுக்கு**
**வேரின் சூட்சுமம் தெரியவில்லை**
**பொதுத்துறை விற்கும் அரசு”**

*இப்படி எத்தனை கவிதைகள்!*

*இந்தக் கவிதைத் தொகுப்பை முழுவதும் படித்து முடிக்கும்போது ஆரிசன் தன் முதல் தொகுப்பிலேயே தன்னை ஒரு கவிஞன் என்று நிறுவிவிட்டார் என்ற எண்ணம் இயல்பாகத் தோன்றுகிறது. குற்றாலச்சாரலில் முழுவதும் நனைந்த அனுபவம் ஏற்படுகிறது. ஹைக்கூக் கவிதைகளின் பன்முகத் தன்மைக்கு இந்நூல் ஒரு பெருமை மிக்க பங்களிப்பாகும்.*

**ச.செந்தில்நாதன்**

*துணைத்தலைவர்*
*தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்*
*சென்னை-78*

# மனக்குளத்தில் சலனங்களோடு...

வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் கவிதை இருக்கிறது. சிலர் தோண்டிப் பார்த்து தேடுகிறார்கள். சிலர் முகவரி தேடி அலைகிறார்கள். சாலையோரமாய் நடந்து போகிற கவிஞனின் கண்களுக்கு மட்டும் எப்படியோ அகப்பட்டு விடுகிறது கவிதை.

நாமும் பார்த்தது தான், நம்மோடு பழகியது தான், நம் அனுபவம் தான்... இருந்தாலும் கவிஞனின் பேனாவுக்கு மட்டும் அது கவிதையாகி விடுகிறதே.! எப்படி சாத்தியமாகிறது..? நம்மால் மட்டும் ஏன் முடியாமல் போனது....? சக மனிதர்களின் உள்மனங்களுக்குள் ஊடாடிக் கொண்டிருக்கின்றன இப்படியான பல கேள்விகள்.

கவிஞனும் இந்த மனித சமுதாயத்தில் ஒருவன்தான். இந்த சமூகம் குறித்தும், மக்கள் குறித்தும், சமூகத்தில் இன்னும் அகற்றப்படாமல் இருக்கிற கீழ்மைகளைக் கண்டும் கோபப்பட்டு, உணர்ந்து, உள்வாங்கி தன்னையே மெழுகாய் உருக்கும் கவிஞனின் பேனா முள்ளில் அகப்பட்டுக் கொள்கிறது கவிதை.

'கவிதை செய்கலை, ஹைக்கூ வாழ்க்கை' என்பார் கவிஞர் தமிழ்நாடன். உண்மை தான்; செயற்கையான ஒப்பனைகளை ஒருபோதும் விரும்புவதில்லை ஹைக்கூ வாழ்வின் ஒவ்வொரு துளி அனுபவத்தையும் தொட்டு எழுதியதால் தான் கவிஞர் ஆரிசனின் இந்த ஹைக்கூ கவிதைகளில் ஈரம் ஒட்டுகிறது.

இருபத்தெட்டாண்டுகள் நான் வாழ்ந்த; வளர்ந்த புதுக் கோட்டை மண்ணைவிட்டு, முந்நூறு கிலோ மீட்டர்களுக்கு அப்பாலுள்ள ஒரு ஊருக்கு குடிமாறிப் போகிறேன்... என்றபோது, பலரும் கேட்ட கேள்வி ஒன்று இப்போதும் நினைவில் நிற்கிறது.

*எப்படி இத்தனை வருசமாபேசிப் பழகின ஆட்களையெல்லாம் விட்டுட்டு வேற ஊருக்குப் போகப்போறே...? கேள்வியின் வலி உணர்ந்தேன். ஆனாலும், உள்ளுக்குள் லேசான நம்பிக்கை. எனது குறிப்பேட்டின் முதல் பக்கத்தில் எழுதி வைத்திருந்த அந்த ஹைக்கூ கவிதையைக் காட்டினேன்.*

**'பிடுங்கி நட்ட செடி**
**வேர் ஈரத்தில்**
**ஒட்டியிருக்கும் மண்'**

*நண்பர் புரிந்து கொண்டார். முகம் மலர்ந்தார். மனசில் ஈரத்தோடு செல்கிற மனிதர்களோடு பேச,பழக எந்த மண்ணுக்குச் சென்றாலும் மனிதர்கள் காத்திருப்பார்கள். முன்பே பலமுறை முகம்பார்த்து பேசியிருந்த போதிலும், ஓரிரு கவிதைகளை வாசித்திருந்த போதிலும்... மனசுக்கு மிக நெருக்கமாய் கவிஞர் ஆரிசன் வந்தது,வந்தைக்குக் குடிவந்த சமீபநாட்களில் தான்.*

*வாரத்திற்கு மூன்று முறையேனும் நாங்கள் சந்திக்கிற வாய்ப்புகள் கூடின. முகம் பார்த்து சிரித்துப்பேசும் சில நிமிடங்களுக்குள் அவர் கையிலிருக்கும் அந்த அழகிய டைரி என் கைக்கு மாறி விடும். ஆர்வத்தோடு பிரிப்பேன் உள்ளே கவிஞரின் அழகிய கையெழுத்துப் படிக்கத் தூண்டும். என் ரசிப்புக்கு ஒத்துவருகிற மாதிரியான கவிதைகள் ஒவ்வொரு வாசிப்பிலும் ஏழெட்டு கிடைத்துவிடும்.*

*ஹைக்கூ குறித்து எனது கருத்துகளை அவரிடம் பரிமாறிக் கொள்வேன். அக்கறையாய் கேட்பதோடு நில்லாமல், ஹைக்கூ நூல்களைத் தேடிப் படிக்கத் தொடங்கினார்.*

*கல்லூரி நாட்களில் அவருக்குள் துளிர்த்தெழுந்த கவிஞன். வாழ்வின் சுழலுக்குள் சிக்கிகொஞ்ச காலம் தொலைந்து போய்விட்டதை சற்று வருத்தம் தேய்ந்த குரலில் பகிர்வார். காற்றின் வீச்சில் அவரின் டைரிப் பக்கங்கள் ஹைக்கூக் கவிதைகளால் அலங்கரிக்கப்பட்டன.*

*எனக்குள் ஒரு பெரிய மகிழ்ச்சி. கவிஞனொருவன் தொலைந்து விடவில்லை. சில காலம் இளைப்பாறிவிட்டு இதோ... மீண்டும் புறப்பட்டுவிட்டான். என்று குதூகலத்தோடு*

சொல்லிக் கொண்டேன். கவிஞர் ஆரிசனின் மொத்த ஹைக்கூக் கவிதைகளையும் வாசித்த அவரின் முதல் வாசகனாகத் தான் என்னை உணர்கிறேன். இந்நூலில் உள்ள தேர்ந்த ஹைக்கூ கவிதைகள் கவிஞரைப் பற்றியும் அவரின் கவியாற்றலையும் உங்களுக்குச் சொல்லும்.

வெறும் ஆர்வம் மட்டுமே ஆரிசனை எழுத வைக்கவில்லை. அதற்கும் மேலாய் இந்த சமூகத்தின் மேல் அவர் கொண்டுள்ள அளவற்ற அன்புமே... இந்த ஹைக்கூ கவிதைகளின் அமோக விளைச்சலுக்கு அடியுரமாக இருந்திருக்கின்றது

மேற்கோள் காட்டுவதற்கு பல நல்ல கவிதைகள், இந்நூலில் உள்ளன. இருப்பினும், என்னைக் கவர்ந்த சில கவிதைகளைச் சுட்டத்தான் வேண்டும்.

**‘பசியோடு குருவிகள்**
**விதை தேடும்**
**நிலங்கள்’**

நிறைய உள் அர்த்தங்களை தனக்குள் புதைத்து வைத்திருக்கிறது இந்த ஹைக்கூ. காட்சியை அப்படியே நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தும் தன்மை இவரின் ஹைக்கூ கவிதைகளில் வெகு இயல்பாய் கை கூடியுள்ளது.

**‘மாட்டுத் தொழுவத்தில்**
**கன்றின் ஈரம்**
**பிரசவத்தில் பசியாறும் பசு’.**

வாழ்வின் முயற்சிக்கு நெம்புகோல் கொடுப்பதான ஹைக்கூ...

**‘சீக்கிரம் தேடு**
**வாழ்க்கை அழிகிறது இருட்டில்**
**எரியும்தீக்குச்சி’.**

இப்படியாய்... பட்டியலிட்டால் நீளும் ஹைக்கூ அணிவரிசை.

கவிஞனும், கவிதையும் வேறு வேறல்ல. இயல்பாய் பழகுகிற, எளிமையாய் அணுக முடிகிற கவிஞர் ஆரிசனைப் போலவே தான்... அவரது ஹைக்கூ கவிதைகளும் உள்ளன.

*சேற்றின் ஈரம் தொட்டு, அணுகுண்டின் வெடிப்பின் வெப்பம் வரை... எல்லாவற்றையும் தன் ஹைக்கூ கவிதைகளுக்குள் பதிவு செய்கின்ற கவிஞர் ஆரிசனை, தமிழ் ஹைக்கூ கவியுலகும் தன் வரலாற்றின் பக்கத்தில் பதிவு செய்து கொள்ளும். குளத்தில் மிதக்கிற இந்த ஹைக்கூ தீபங்கள், நம் மனக்குளத்தில் எழுப்பிப் போகும் சலனங்களை சரியான வழியில் அடையாளப்படுத்துவோம்.*

*சமூகப் பாதையில் வெளிச்சம் விரியட்டும்*

*தோழமைக் கவிக்கு வாழ்த்துகள்.*

**மு.முருகேஷ்**

# என்னுள் மலர்ந்த பூக்கள்...

*தலைமுறையின் பழைய வீட்டிலிருந்து, அனுபவங்களி னூடே ஆழ்ந்து புதிய வீட்டின் குடியிருப்பிலிருந்து இலக்கியங்களை எதிர்கொள்ளும் எனக்கு. கவிதைப் பரிணாமம் மரபிலிருந்து - புதுக்கவிதை, இதிலிருந்து ஹைக்கூ என்ற ஜப்பானிய வடிவக் கவிதையினை தமிழ்மொழியின் வழி பதிவு செய்வதில் ஆர்வமேற்பட்டது.*

*சொல், நயம்-அனைத்து வளத்துடன் கூடிய ஆளுமையுடன் தமிழ் ஹைக்கூ வேகமாக வளர்ந்து வருகிறது தமிழ் மண்ணில்! சமீப காலங்களில் தான்... நானும் ''ஹைக்கூ'' கவிதை காலாண்டிதழைப் படிக்க அதன் ஆசிரியர் தோழமையுள்ள மு.முருகேஷ் எனக்கு வழங்கி உதவினார். புத்தகம் முழுமையும் படித்து கவிதைகளை உள்வாங்கி சுவாசிக்கத் தொடங்கினேன். உறுதுணையாக கவிதைத் தொகுப்புகளையும் எனக்கு வேண்டும் போதெல்லாம் இன்முகத்துடன் வழங்கி உதவினார்.*

*படித்துச் சுவைத்தும், சுவைத்ததை அசைபோட்டும் சுவாசித்தபோது ஹைக்கூப் பூக்கள் எனக்குள்ளேயும் மலரத்தொடங்கியது. சிந்தனையில் உதித்த சின்னச் சின்னப்பூக்களை எனது நாட்குறிப்பில் கல்வெட்டாய் செதுக்கி வைத்தேன். சிற்பியின் கைபட்டு செதுக்கிய ஹைக்கூ சிற்பங்களாகவே இந்த குளத்தில் மிதக்கும் தீபங்களின் கவிதை மலர்கள் தீப விளக்கில் மின்னிக்கொண்டிருக்கின்றன.*

*கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்ற அறிவியல் தத்துவத்தை உள்வாங்கி வளர்ந்து வரும் ஹைக்கூ தமிழின் அத்தனை தளங்களிலும் விரிவுபடுத்தும் போதுதான்... அதன் செல்வாக்கை*

தமிழ் மொழியிலும் நிலை நாட்டமுடியும். குறுகிய வடிவத்தில் வாழ்க்கை, சமூகம், இயற்கை, அரசியல், பொருளாதாரம் இன்னும். அனைத்து அம்சங்களையும் நறுக்கென்று சுட்டிக்காட்டி சூத்திரம் போலவே ஹைக்கூ ஆளப்பட வேண்டும். அப்போதுதான் சறுக்கலின்றி சவாரி செய்ய ஹைக்கூப் பயணம் ஏதுவாக இருக்கும்.

உங்கள் கைகளில் இருக்கும் இதழின் தீபங்களான ஹைக்கூக் கவிதைகள் உங்கள் பார்வைக்கும் படிப்புக்குமாக தொடர்ந்து பயன்படுமானால்... என்னை மெருகேற்றும் சிற்பிகளாய் எத்தனையோ வாசகக்கவிகள் இருக்கிறார்கள் என்ற பெருமிதம் பொங்க உங்கள் விமர்சன உளிகள் தயாராகட்டும்.

**ஆரிசன்**

## நூலுக்கு மெருகேற்றி ஒளி கொடுத்த மெழுகுவர்த்திகள்...

*வழக்கு மன்றமே*
*வாழ்க்கையாயிருந்தாலும்*
*இலக்கிய வனப்பில்*
*இதயத்தை மலரவிடும்*
*எழுத்துச்சிகரம்*
*இனிய தோழமை ச.செந்தில்நாதன்.*

*குறள் முற்றுணர்ந்து*
*ஆய்ந்து-*
*வாழ்க்கைப் பயணத்தை*
*வள்ளுவத்தோடு இணைத்து*
*வாழும் குறள்ஞானி...*
*நினைவுக்கலை சித்தர்*
*மாண்புடையாளர்*
*இரா.கனகசுப்புரத்தினம்.*

*இலக்கியமே வாழ்க்கையாகி*
*படைப்பாளர்களை*
*பட்டை தீட்டும்*
*அகநி இல்லத்து*
*மணற்கேணி...*
*எழுத வைத்த இதயம்*
*என் இதயத்தில்*
*முதல் சிற்பியாய்*

*என்றும் நிலைத்திருக்கும்*
*இனிய நண்பர் மு.முருகேஷ்*
*என் ஊக்கத்திற்கும்*
*ஆக்கத்திற்கும்...*
*உறுதுணையாய் நிற்கும்*
*வாழ்க்கைத் துணை*
*அன்பின் இணை...*
*ந.அமுதா*

*மரபு வானத்தில்*
*புதுக்கவிதை நிலவின் பயணம்*
*கொட்டிக் கிடக்கும் ஹைக்கூ நட்சத்திரங்கள்.*

*வானத்தை கிள்ளலி*
*யோசிப்பதற்குள்.....*
*மழையாய் ஹைக்கூ,*

*திருநீற்றுப் பட்டை*
*இரு கண் மலர்கள்*
*முகத்தின் நெற்றிப்பொட்டாய் ஹைக்க.,*

**ஆரிசன்**

*"சாவித்திரி ஆரிமுத்து இல்லம்"*
*எம்ஜி.ஆர் நகர், கீழ்க்கொடுங்காலூர்*
*வந்தவாசி -604 403.*

வீட்டில் கிணறு
தாகம் தீர்த்தது
மழை நீர்

உழவன் இறைத்த நீர்
மகிழ்ச்சி அடைந்தது
வாடும் பயிர்

வண்ணச் சீருடையில்
பால் நிலவு
இரவில் ஒளி

பற்றி எரியும் குடிசை
பதறும் மனிதர்கள்
ஜாதியின் வேர்கள்

தேங்கிக் கிடக்கும்
துணிகளின் வேலைநிறுத்தம்
நெய்தவன் பட்டினியில்

பிணவாடை இன்றி
சுடுகாடு வழியெங்கும் மணக்கிறது
பிணத்து மாலைகள்

கல்லடிபட்டும்
குண்டடிபட்டும் பெற்ற சுதந்திரம்
கிணற்றுநீர்

நிறைய மீன்கள்
புயலில் கரை ஒதுங்கியது
மீனவன் படகு

சீக்கிரம் தேடு
வாழ்க்கை அழிகிறது இருட்டில்
எரியும் தீக்குச்சி

மழைநீர் ஊற்று
வெளிச்ச வேர்களில்
எரியும் நட்சத்திரங்கள்

பசியோடு வாங்கி வைத்த
எச்சில் கூழில்
பல்லி

பட்டம் விட
பசையின்றி
வயிற்றுப் பசியில் சிறுவன்

சுதந்திர மனிதனுக்கு
ஜோதிடம் சொன்னது
கூண்டுக் கிளி

பந்து உயரத்தில் பறக்க
வாழ்க்கைக் கனவு
தரையில் மனிதன்

மலையில் பிறந்து
தரையிறங்கி அழுகிறதே...
அருவி நீர்

குளம் நிறைய பூக்கள்
சூடுவார் இன்றி
வேடிக்கை பார்க்கும் பிள்ளையார்

எண்ணெய் இன்றி
எரியும் தீபம்
திரி சேமித்த உணவு

காடாவிளக்கு காட்டியது
கனிவுப் பார்வை
இருட்டு மறைத்த ஒளி

திரியின் சிவந்த நாக்கில்
உயரும் தீபம்
இமை விலகும் பார்வை

மண்ணுக்குள் விதை
கண்ணுக்குத் தெரிவதில்லை
செடியின் சூட்சுமம்

சிலைத் தலைவர்கள் எச்சரிக்கை
கலவர ஜனங்களின்
காலடி சத்தம்

தாகம் தீர்க்காத கடல்
பொங்கி அழும் கோபம்
தொடரும் அலைகள்

படையல் சோறு
கரையும் காக்கைகள்
உண்மை உறவு

கையில் புறா
பறந்து செல்ல மனமில்லை
சமாதானத்தில் நேரு சிலை

பொத்தல் குடிசை
வீட்டுத்தரையில் மழை நீர்
நனைந்த வாழ்க்கை

சலங்கை ஒலி
மனதில் நீ
எட்டிப்பார்க்க ஆவல்

இதழில் முத்தம்
ஓயாமல் தொடரும் நினைவுகள்
கரை தொடும் அலைகள்

முழுநிலா மறைத்த
குருட்டு ராத்திரி
அமாவாசை

இதழ் மூடி
பூவுக்குள் சிறை
சுகம் பெறும் வண்டு

அவசர உலகம்
அச்சம் முழுதும் உயிரோடு
அணு யுத்தம்

புல் நுனியில்
சூடும் பனி மகுடம்
நிலவுக்கு நன்றி

மழை முடிந்து வெயில்
செடியின் சிறகில்
பூச்சிகள் இசைவிழா

தூரிகைகளோடு
சூரிய உதயம்
ஒரு குடையின் கீழ் ஆட்சி

கருக்கல் சேற்றிலும்
நாற்று நடவு
தோட்டத்து நிலவு

தாவணிக் கனவு
வீட்டுக்குள் நனவானது
சிட்டுக் குருவி

புல்லின் சிறகில்
பறக்கும் பூ
சூரியச் சூடு

மேகத்தை சிக்கெடுத்து தலைசீவ
காலகாலமாய் காத்துக் கிடக்கும்
தென்னை மரம்

இதழ் விரியும்
பூவின் சத்தம்
பதிவு செய்த நிலவு

கட்டடித்த நெல்
காவல் துலுக்காணம்
முதல் முழுவதும் ஆண்டைக்கு

கட்டடித்த நெல் அம்பாரம்
ஆண்டையின் காவல்
தூங்காமலே வேலைக்காரி

செதுக்கிய சிலையின்
கண்களிலுமா கண்ணீர்
சிற்பியின் வாழ்க்கை

தவமிருக்கும் குளத்துக்குள்
மலர்ந்த ஒற்றைப் பூ
நிலா

நிலாவைக் காட்டி
ஊட்டும் சோறு
பொய்யோ தாய் முகம்?

கூட்டுப் பறவைகளுக்கு
இரவில் வகுப்பெடுக்கும்
நிலா

கிழிசல் வாழ்க்கை
அலசிப் பார்க்க
விடியவில்லை இரவு

தளிர்களின் காற்று
தரையிறங்கியது
வசந்தம்

வரவேற்கிறது
பனிமலை
தேன் நிலவுக் காதலர்கள்

இஸ்திரி போட்டவன்
கொடுத்த சில்லரை
சூடு உணர்த்தும் வாழ்க்கை

தூரத்து உறவுகள்
வருகை உணர்த்தும்
கரையும் காக்கைகள்

தாயின் உடலோடு
ஒட்டி குடை பிடித்தாள்
நர்சரி பாடம்.

ஆடிக்காற்று வாஞ்சையில்
அம்மி மிதக்கும்
வரவேற்கும் பூக்கள்

வீட்டுச்சுவர்
வெளிச்சத்தில் மேயும் பூச்சிகள்
மீன் கொத்தியாய் பல்லி

விதை போடாமலே
எக்கச்சக்கமாய் பூக்கள்
வானில் நட்சத்திரங்கள்

மின்சாரத்தடை
கொசுவின் ரீங்காரம்
தயார் மனித ரத்தம்

கள்ளிக்காடு அழிப்பு
பாசமாய்
பெண்சிசு ஜனனம்

சேலை இடுப்பிலும்
ரவிக்கை இடுக்கிலும் பணப்பை
திருடர் பயம்

மழை நின்றது
வெள்ளத்தில் வீடு
படகுப் பயண வாழ்க்கை

அகண்ட மணற்பரப்பு
அலைகளின் சப்தம்
காதல் நண்டுகளின் மௌனம்

சருகுக் காட்டிலும்
மனசு இனிமை
குயில் சங்கீதம்

நள்ளிரவு வானம்
நன்றி சொல்லும் நட்சத்திரங்கள்
நிலவின் பூரிப்பு

குகை இருட்டில்
கண்சிமிட்டும் நட்சத்திரம்
விட்டில் பூச்சி.

செடியின் மீது
வண்ணத்துப் பூச்சி வைராக்கியம்
சிறகசைக்காமல் காதல்

காய்ந்துபோன ஆற்றுப்படுகை
வெப்பகாலத்திலும்
வெள்ளரிக் கொடி

பிணம் செல்லும் பாதை
ஆண்டையின் கோபம்
வயலுக்குமா தீட்டு?

ஓட்டை வண்டி
ஓலைக் குடிசை
வானமே வாழ்க்கை

ஓட்டை வண்டியில்
ஊர் கடந்து பிரசவம்
ஆஸ்பத்திரி அவஸ்தை

இப்பவும் இசைக்கும்
ஆற்றில் இருக்கும்
வண்ணாத்திக்கல்

மனிதர் நடந்து
பாதையாக்கினார்கள்
புல்லின் சோகம்

ஊதி ஒளிரும் கனல்
தங்கதின் வாழ்க்கை
முயற்சி திருவினையாக்கும்

மண்ணைச் சுரண்டி
போட்டவிதை
வளரும் செடி

உருவம் செதுக்கிய சிலைக்கு
உயிர் கொடுத்த சிற்பி
திறந்தது கண்கள்

நட்சத்திரங்கள் அழித்து
கரிய மேகங்கள் ஊர்வலம்
மழை பூமி

பழத் தோப்புக்குள்
ஊடுருவிய ஒற்றைப்பழம்
சிரிக்கும் வெளிச்சம்

கூட்டுப்புழுக்களின்
தவத்தைக் கலைப்பதா?
மகரந்தக் கனவு

சேற்றில் கால் பரப்பி
நாற்று நடவு
வீட்டுக் குழந்தை ஞாபகம்

வயிறு முழுக்க
மழை ஊசிகள்
கிழியவில்லை வானம்

தானாய் உதித்து
தரையில் விழுந்தது
எரி நட்சத்திரங்கள்

பட்டாசு வெடித்து
தீபாவளி வாழ்த்து
கந்தகக் குழந்தையின் கண்ணீர்

மண்ணும் மலடாகி
மனிதம் அழிக்கும்
அணு ஆயுதம்

அரச மரம்
தனிமையில் பிள்ளையார்
குளத்துப் பூக்களுக்கு வெட்கம்

காதல் உறுத்தியது
மாற்றான் தோட்டத்தில்
திருமணப் பத்திரிகை

தானாய் உதித்து
தரையில் விழுந்தது
எரி நட்சத்திரங்கள்

பட்டாசு வெடித்து
தீபாவளி வாழ்த்து
கந்தகக் குழந்தையின் கண்ணீர்

அணு ஆயுதம்
மனிதம் அழிக்கும்
மண் அழுதும் மலடாகும்

அரச மரம்
தனிமையில் பிள்ளையார்
குளத்துப் பூக்களுக்கு வெட்கம்

தெரியுமா
மனசின் உறுத்தல்
அச்சான திருமணப் பத்திரிகை

கனிந்த பழத்தில்
நிறைந்த சுவை
கனியில் அணிலின் ரேகை

விடுதலை பெற்றது
வண்ணத்துப் பூச்சி
கூடவே பூவின் மகரந்தம்

மண் சாலை
புழுதி கிளப்பாத வண்டி
கட..புட சத்தம்

பறந்துபோ பூவே
தரை தொடாதே
பூ தான் பூமி

வேலை கேட்டுப் பேரணி
இரவின்
நட்சத்திர ஊர்வலம்

திருடர்கள் பயந்தனர்
ஊர்க்காவல் பணி
நிலா பயணம்

காற்றே பேசு
பூவின் மணம்
செடியின் தாலாட்டு

ஊசி நூலோடு
தொடர் ஓட்டம்
ஆடையில் மனிதம்

பாறை செதுக்கிய சிற்பி
தவத்தில் இருக்கிறது
சிலை

மழை பிரசவம்
வெப்பத்தில் சிரித்தது
கொப்பளங்கள்

ரத்தம் திருடும்
கொசுக்களுக்கு
மின்விசிறி எச்சரிக்கை

அக்காவின் கனவில்
மெகா சுயம்வர மாப்பிள்ளைகள்
கம்யூட்டர் மூளை

உயிரின் ஆற்றல்
இசையில் பாட்டு
மூங்கில் தவம்

காய்ந்த மரத்திலும்
காய்த்துத் தொங்கும்
பேரிச்சை

அந்தி மேகங்கள்
தென்னை ஓலையில்
கலர் கனவுகள்

பூமி வெடித்து
பழைய குளம்
வானம் நோக்கி தவம்

பூவின் வைராக்கியத்தில்
வண்டு காதல்
கனியின் விதைக்குள் சிறை

தீ வளர்ந்து
பசியாற்றுதே
அடுப்பு

ராப்பிச்சைக்கு
நேரமாச்சு
வெளிச்சம் தேடி கொசுக்கள்

பூவின் மடியில்
வண்டின் தவம்
கோபத்தில் சூறாவளி

பனை மரத்திலும்
தொட்டில் குழந்தை..
கள் வடியும் பூக்கள்

சாணியும் பூ பூக்கும்
மார்கழி திங்கள்
பனியின் தவம்.

சிலையில் தலைவர்கள்
காக்கையின் எச்சங்கள்
கரையும் நினைவஞ்சலி

வகுப்பறைகள்
விடுமுறை தவம்
வேள்வியில் மாணவர்கள்

உதிர்ந்த பூவில்
உட்கார ஆசை
சிறகு தொலைத்த பூச்சி

நிலவு வெளிச்சம் தான்
வீட்டுக்குள்
உருகும் மெழுகு

குருட்டுப் பிச்சைக்காரன்
பாட்டுக்கச்சேரி..
கையில் இசைத்தட்டு

முந்தானை மூடி
முத்தமிட்டது
காற்றும் பார்க்காத காதல்

காற்றடைத்த பலூன்கள்
ஊசியிலைக் காட்டில் தவம்
கானல் வாழ்க்கை

சுமைகள் இறக்கி வைக்க
மணியடித்தது
பள்ளியறையில் மாணவர்கள்

நள்ளிரவில் கரண்ட் கட்
கனவு கலைந்தது
ஞாபகப்படுத்தும் கொசுக்கள்

இரவில் மலர்ந்த
அல்லி
கவலையில் நிலா

தீ வளர்த்தும்
கருகாத யாகம்
குயவனின் மண் பாண்டங்கள்

பள்ளிக்கூட பிள்ளைகள்
ஆஸ்பத்திரியில்
உணவில் பல்லி

மழை முடிந்த இரவு
தெரு விளக்கில்
ஈசல் கூட்டம்

தரிசு நிலங்களில்
வீடுகள் விளைந்தது
உணவுப் பஞ்சம்

அலையடித்து விலக நினைத்தாலும்
மீண்டும் மீண்டும் அலைகள்
ஞாபகப் பிசிறில் காதல்

காற்றுக்குப் பயந்து
அரளிப்பூக்கள்
பூஜையறையில் தவம்

நாற்று வளர்ந்து
பயிர் முற்றியது
மகிழ்வோடு பறவைகள்

அமைதியான பிள்ளையார்
விரும்பாத விளையாட்டு
கரைக்கிறார்கள் கரையாதவர்கள்

பார்த்து ரசிக்கத்தான் முடிகிறது
குளத்தில் பூக்கள்
பிள்ளையாரும் வெட்கத்தில்

பச்சைக் கொடி சுற்றி
நீந்தும் கைகளைக் கட்டுகிறது
குளத்தில் பூக்கள்

வலையில் மீன்கள்
வாழ்விழந்த மீனவன்
படகு விபத்து

புழுவின் ஆசை
முள்ளில் மாட்டியது
தூண்டில் மீன்

ஐயனார் கத்தியும்
உடைந்து போகும்
மின்னல் பார்வை

ஆ.. திறந்து தாயின்
கன்னத்தைக் கோதும் குழந்தை
மலரை வருடும் தளிர்

சுதந்திரமாய்
மேய்ப்பவனும் மாடும்
வேலியில்லா நிலம்

அலையடித்து சிரித்தது
கிளிஞ்சல் மீது
நண்டின் காதல்

புழுக்கத்தில் வேர்க்கும் உடல்
இடியின் ஓசை எச்சரிக்கை
மழை தூவும் வானம்

என்ன துணிச்சல்?
மேகத்தோடு சேர
அருவிப்புகையின் தாகம்

துடுப்பை ஒதுக்கி
தன்னந்தனிப் பயணம்
இயந்திரப் படகோ நிலவு?

ஆற்று வெள்ளம்
குருவிக் கூடு
கரை ஒதுங்கும் மனிதர்கள்

வலையில் சிக்காத
மீன் குஞ்சுகள்
கெட்டியான ஆயுள்

மொளக்குச்சியில் மாடு
வேலி தாண்டியது
கன்று

நெருப்பில் நீ
நீரோடு நான்
தீப்பற்றுமோ காதல்?

சிறகோடு பிடிக்க ஆசை
பூவின் இதழ்களில்
தளிரின் கரங்கள்

பூமிக்குள்
நெளியும் புழு
மண் ஆராய்ச்சி

முள் மறைத்து மண் புழு
தண்ணிக்குள் தவம்
சிக்கியது மீன்

விளக்கு நின்றது
கும்மிருட்டு மழை
வழிகாட்டும் மின்னல்

ஆறுதல் சொல்லித் தீரவில்லை
கோபத்தில் கடல்
தொடரும் அலைகள்

காடும் பள்ளிக்கூடமானது
காற்றின் இசையைப
பாடியது மூங்கில்

ஆண்டையின் பிணம்
ஓங்கி அடித்த பறை
ஈரம் காயாமலே

நதியின் பாதை
முழுக்க காவல் படைகள்
மரங்களின் சாட்சி

பாதச் சுவடுகள்
படம் பிடித்து சென்றதோ
கடல் அலைகள்

எத்தனை முயற்சி
கரையைக் கடக்க
எல்லைக்குள்ளே எழும் அலைகள்

வறண்ட ஆறும்
வற்றாத இசையில்
தொடர்ந்தது காற்றின் பயணம்

மழையின்
சங்கீதம் புரிகிறதோ?
பாட்டிசைக்கும் பட்டாம்பூச்சி

பனை மரத்தில் நிலா
பால் குடிக்கிறது
பானை

கிளியின் பேச்சை
மொழி பெய்த்தது
மழலை

பனியில் தலைசீவ
மேகங்களுக்கு விருப்பம்
எதிர்ப்பில் நிலவு

நெசவாளிகள் வாழ்க்கை
பஞ்சு பஞ்சாய் பசி
பற்றி எரியும் நெருப்பு

கூட்டுக்குள் முட்டை
திருடிய கள்வன் யார்?
நிலவொளியில் பாம்பு

வாயிற்கோலம்
நிரம்பி வழியும் எறும்புகள்
ரேஷன் திறந்தாச்சு

வேர்ப்பலா
விதை நெல் அரிசி
ருசியோடு கடன்காரன்

தண்ணீரில் தாமரை இலை
அறுந்த முத்துச்சரம்
குடைபிடிக்கும் தாமரை

முழுதும் நனைந்தும்
முக்காடு போட முடியாமல்
தாமரை இலைத் தண்ணீர்

குளத்தில் தாமரை தவம்
இலைமீது பனித்துளிகள்
படரும் பசுமை நினைவுகள்

பனித்துளியைச் சுமந்த
தாமரை இலைகள்
காவலில் பூ

தாமரைப் பூவின் கண்ணீர்
சூடு தாங்கியும் பசுமை
இலை முழுதும் குளிரில்

காற்றுப் பஞ்சம்
காணாமல் போனது
ரவிக்கையில் ஜன்னல்

கறந்த பாலில்
கசியும் ரத்தம்
மார்வாடியின் வட்டி

சிரிக்க முடியவில்லை
தினமும் நட்சத்திரங்கள்
காவலுக்கு நிலவா?

சாணியுடன் மண வாழ்க்கை
மணக்கிறது பூசணிப்பூ
விடியல் மார்கழி

ஆறு நதியானது
தண்ணீர் குடித்தும்
தாலாட்டும் மரங்கள்

பட்டுப் பூச்சியும்
நாற்று நட்டது
புழுதியெங்கும் சிறகுகள்

சாதுவான பிள்ளையார்
சமிக்ஞை காட்டி காதல்
குளம்முழுதும் வெட்கத்தில் மலர்கள்

மாட்டுக் கொம்புகளுக்கு
வண்ணப் பூசினர்
தெரிகிறது கட்சி

குருவித் தலையில்
பனங்காய்
வானம் சுமக்கும் நிலா

காலை கஞ்சிக்குப் பின்
மாட்டோடு சிறுவன் படிப்பு
மேய்ச்சல் நிலம்

அருவியின்
தொடர்ந்த கண்ணீர்
உப்பு மேகங்கள்

தரிசு நிலத்திலும்
தாவணிக் கனவு
பசியோடு பட்டுப்பூச்சி

கனிதரும் மரங்களுக்கு
வேரின் சூட்சுமம் தெரிவதில்லை
பொதுத்துறை விற்கும் அரசு

அருவி அதிர்ந்தது
அணுக்களின் சலனம்
அழகாய் தவழும் நதி

நதியில் படகு
துடுப்புகளாய்
கரையோர மரங்கள்

நிலவு முகம்
சூரிய சந்திரக் கண்கள்
நட்சத்திர பொட்டு

பள்ளிக்கூட மணி அடித்தது
மாணவர்கள் பறந்தனர்
வேடந்தாங்கல் பறவைகள்

கட்டில் கிடைத்தாலும்
தரையில் படுத்துறங்கும்
விட்டில் பூச்சி

காற்றையும் மீறி
மெழுகுவர்த்தியும் கேட்டது
முகிலின் சோகம்

வெள்ளம் ஓடியும்
விழுதுகள் இறங்கி
வேர்விடாமலே கலந்தது மழை

உழவு மாடுகள்
நிலம் பார்த்து சிரித்தது
பயிர்களில் பட்டாம் பூச்சி

புழுதிச் சேறு
புதுசாய் நாற்றுகள்
கனவில் விளைச்சல்

வேரூன்ற தரையை நோக்கி
தொங்குகிறதோ?
ஊஞ்சல் விழுதுகள்

இருட்டில் எரியும் மெழுகு வர்த்தி
தேர்வின் அவசரத்தில்
கரையாத புத்தகம்

கதர்ச்சட்டை கிழித்து
கல்லெரிந்த மனிதர்கள்
அகிம்சையில் காந்தி சிலை

சூரிய வெப்பத்தில்
சூடு தாங்காமல்
வானமெங்கும் புண்கள் நட்சத்திரங்கள்

சாராயமும் மல்லிகைப் பூவாய்
மணந்தது இரவு
"கள்" ளானாலும் கணவன்

வசிப்பிடம் தேடி
புறாக்களின் பயணம்
கூடு இல்லாத வானம்

நிலவையும்
சிறை வைத்தது
அமாவாசை இருட்டு

மழை நனைத்த பூமி
உறவு விரிந்தது
எங்கும் மண் வாசம்

உலக நடப்புகள் தெரியாமல்
குஞ்சு பொரிக்கும்
பொந்துக்குள் முட்டைகள்

இசைகேட்டு
வளர்ந்த பயிர்
புழுதி ஒட்டிய நிலம்

மின் தடையில்
உயிர்த்தெழும் மெழுகுவர்த்தி
வாழ்வின் நம்பிக்கை

மலையின் முக்காட்டில்
பனி மகரந்தம்
கருக்கலைத்த சூரியன்

முள்வேலிக்காடு முழுதும்
முடைநாற்றம்
கழிப்பறைக் கனவில் கிராமங்கள்

குருட்டுப் பாடகன்
நிரம்பி வழியும் மக்கள்
வயிறு நிரம்பாமல் தட்டு

உயிர்வாழ உரமின்றி
செத்தது கொக்கு
பாலைவனக் குடியிதுப்பு

தெளிந்த நீரில் நனையவில்லை
முகத்தின் பிம்பம்
அலைவரிசை ஒலிபரப்பு

முகம்
நெற்றியாய்க் கரைந்ததே
தேய்பிறையில் நிலா

மூங்கில் காடும்
வெந்து அழிந்தது
சோகத்தில் பறந்த குயில்கள்

ஆளாய்ப் பறந்து நிலத்தில்
விதை தேடுது
பசியில் குருவி

கடலில் எழும்பும் அலை
நடனமாடும் படகு
உற்சாகத்தில் மீன்கள்

பயிர் விளையாமலே
மகசூல் வந்தது நிலத்தில்
பட்டா மனை விற்பனை

தீ மூட்டினார்கள்
எரிந்தது சிதை
சுட்ட செங்கல்

மருதாணிப் பாசம்
அடிக்காமலே சிவந்தது
உள்ளங்கை

வேர்களுக்குப் பிடிக்கவில்லை
விழுதுகளின் வருகை
விரிசல் நிலம்

உட்கார்ந்து முத்தம் தருமோ ...
பூவின் மீது
வண்டு

இனிய வரவேற்பு
கிளை முழுதும் பறவைகள்
காய்ந்த மரத்திலும் ஈரம்

பாடல் ஒலிக்க
கீறிச் சுழல்கிறது முள்
இசைத்தட்டை

நீரும் எரியுமோ
உச்சி புகையோடு
அருவி

குளத்துத் தாமரைக்கும் திருவிழா
கார்த்திகைப் பெண்களின் தீபம்
கரை ஒதுங்கிய வாழ்க்கை

குளத்தில் தெப்பம்
கற்பூர தீப பயணம்
கண் சிமிட்டும் தாமரை

வாழ்க்கை இருட்டை
குளத்தில் எரித்தேன்
நன்றி சொன்னது தெப்பத்தில் தீபங்கள்

கவனிப்பாரற்ற பயிர்களுக்கு
கார்மேகங்களின் கருணை
மழை நனைத்த நிலம்

பனைமரமும் கரைசேர்த்தது
ஆற்று நீரிலும்
அடித்துச் செல்லாத பாலம்

மரங்களின் நிழலில்
ஆறு களைப்பாறுதே
தணியும் சூடு

மேக மலைகள்
நடுவில் அந்திச்சூரியன்
வரவேற்கும் சாயங்கால மேகங்கள்

மலரில் அமர்ந்தால்
கொடியின் தாலாட்டு
கண்காணிக்கும் காற்று

கூரையில் ஒதுங்கினோம்
மழை நனைத்து வாழ்த்துக் கூறியது
வானவில்

பாம்புக்கு இரையானது
கிணற்றுப் பொந்திலும்
குருவிக் கூடு

ஊது குழலில்
அம்மாவின் மூச்சு
நெருப்புக்குத் தாலாட்டு

பனிச்சிகரம்
பாரதியின் ஞாபகம்
விளையாடி மகிழ்ந்து அஞ்சலி

பாறையிலும் கசியும் ஈரம்
பட்டமரம் பால் வார்த்தது
காற்றில் தப்பியது குருவிக்கூடு

விழியில் தூது
வெளியில் நான்
உள் வாங்கும் நினைவுகள்

முத்தம் தர முயன்றும்
முடியவில்லை
காய்ந்த பூமியில் மழை

தீர்ப்பு வந்தும்
தீரவில்லை தாகம்
வெடிப்பில் பயிர் நிலம்

நடந்தாய் வாழி காவேரி
மணலோடு ஆற்றுப்படுகை
வறண்டு போன விவசாயி.

ஆற்று மணலில்
அணையாமல் மரத்தின் நிழல்
விளக்கு தீபம்

கை விசிறியில்
வியர்வை உலர்ந்தது
சிரித்தது பனை ஓலை

வெடிப்பில் விளைநிலம்
தடுக்காத வானம்
த(று)ருதலையாய்க் காவிரி

காட்டு வாழ்க்கை
வெட்டி முறித்தனர்
கனவில் பயிர் நிலம்

அணிலின் முத்தம்
காற்றின் எதிர்ப்பு
உதிரும் பழங்கள்

வாழ்க்கை இருட்டைச் சுமந்து
நம்பிக்கையோடு பயணம்
குளத்தில் மிதக்கும் தீபங்கள்

வளர்ந்தச் செடியில்
பூக்களை ரசிக்கிறது
குருவி

மயிரிழையில் பயணம்
எப்பவும் மரண பயமின்றி
சிலந்தி வலை

சேற்றில் முளைத்த செந்தாமரை
சூடிக் கொண்ட கலைமகள்
தீண்டாமை ஒழித்த மலர்கள்

வானமும் கப்பலா?
சுமக்க முடியாமல்
கசியுதே மழை-

பூக்களை சுற்றியே
பறக்கும் வண்டுகள்
பயத்தில் செடிகள்

சூறைக் காற்று . .
உல்லாசத்தில் படகு மீன்கள்
பயத்தோடு மீனவன்

வெட்கம் தாங்காமல்
பூத்து விட்டது
பட்டுப்பூச்சியின் முத்தம்

காடும் பாடியது
காற்றின் கீதம்
நிலம் முழுக்க மகரந்தங்கள்

அநாதை உள்ளங்கள்
அழுது புலம்பின
மழையில் பிச்சைப் பாத்திரம்

மீன்கள் தவம் கலைத்து
சிரித்தது தண்ணீர்
வீசியெறிந்த கல்.

குரங்கிடம் பூமாலை
பிய்த்துப் போட்டது
ஐந்தறிவு

விவசாயி மகிழ்ந்தான்
நிலத்தில் சிரிக்கிறது
பயிர்

பசியோடு சேர்த்த உணவை
குஞ்சுகளுக்குத் தந்தது
கூட்டில் படமெடுத்த பாம்பு

சிலிர்க்கும் பனித்துளியில்
வாழ்வின் நம்பிக்கை
சூரிய உதயம்

சிறகு ஆசையில்
கூட்டுக்குள்ளிருக்கும் பிஞ்சுகள்
தொலைவில் வானம்

கரிசல் காடும்
பரிசல் தந்தது
பஞ்சுப்பஞ்சாய் மேகம்

கடல் பாதுகாப்பில்
கலங்கரை விளக்கம்
வழி தேடும் கப்பல்

மொய்க்கும் கொசுக்கள்
தேனடையாய்
எண்ணெய்க் காகிதம்

தெருவிளக்கில்
தொடர்ந்து படித்தது ஈசல்கள்
உதிர்ந்தது சிறகுகள்

அமைதியாய் இருந்த பறவைகள்
கலவரமாய் பறந்தன
வேட்டுச் சத்தம்

சிதறிய உணவையும்
சிக்கலின்றி கொடுத்த நிலம்
உழைத்து ருசிக்கும் எறும்புகள்

சுமை தாங்கும் சோகத்தை
கண்ணீரில் தெரிவிக்கும்
கர்மேகம்

இருட்டு மேகம்
இயல்புடன் தெரிவிக்கும்
அடிமைக் குறியீடு

குமுறல்களோடு வானம்
கொட்டும் மழை தந்தது
விடியல்

நிலவின் பயணம்
ரசிக்கும் வானம்
சிறைப்படுத்தி மகிழுதே அமாவாசை

இறக்கி வைத்த பாரம்
வரப்புகள் மீது
சாயும் பயிர்கள்

கிணற்றில் தண்ணீர்
அழகாய் தெரிகிறதே
மூழ்கியிருக்கும் சூரியன்

மின்னல் பார்வை
மின்சாரம் தாக்கி
தரையில் நடக்கிறதே வானம்

தலைவிரித்து
கதறிய மேகம்
இடியில் சிக்கும் மின்னல்

பட்டுத் தெறித்தது
மரணத்தில்
எரியும் நட்சத்திரங்கள்

மூட்டை முழுவதும் சரக்கு
சுமை தாங்கும் கூலி
பொத்தல் கோணியாய் வாழ்க்கை

பூக்களை ரசிக்குதே
பட்டாம் பூச்சி.........
சீற்றத்தோடு சுற்றும் வண்டு

குழந்தைக்கு
முள் குத்தியது
மலரில் ரத்தம்

பறந்து செல்ல விருப்பம்
தாவணி முழுதும் வண்ணத்துப்பூச்சி
மௌனத்தில் மனம்

முக்கோணத்துக்குள்
தலைவணங்கி அம்புக்குறி
வழிகாட்டும் சாலை

பயிர் இன்றி நிலம்
இரைதேடும் கொக்குகள்
சோகமாய் பார்க்கிறது பறவைகள்

குட்டிச்சுவராய் வீடு
தெளியும் பயத்தில் இருட்டு
காற்றோடு போராடும் தீபம்

காய்ந்த நிலம்
சேற்று நிலமானது
மழையில் சிரிக்கும் பயிர்

மண்ணுக்குள்
கிளை பரப்பும் மனம்
வேரின் பாசம்.

புழுதி மணலில்
என்ஜின் சத்தம்
பயணம் துவங்கும் கிராமங்கள்

வரப்பு தகராறு
தலைமுறைக் கோபம் தீர்ந்தது
வாய்க்காலில் ரத்தம்

புல்லின் மீது
வெள்ளைப் பூ காணவில்லை
சூரியன் வருகை

குருட்டுப் பாடகன்
இருட்டு மேகம்
சில்லரை சப்தத்தில் மழை

மழை பெய்து முடிந்ததும்
காற்றின் தாலாட்டு
செடிகள் தூவும் மழை

காலிப் பாத்திரத்தில் கொதிக்குதே
கொட்டும் அருவி
ஓட்டுக் கூரையில் மழை

மழையின் போராட்டம்
குளிரோடு ரசிக்கும்
பக்கள்

நாற்றங்கால் முகம்
நனைந்திருந்தது.
மழலையின் கண்ணீர்

மதச்சண்டையில்
மண்ணும் அழுதது
ரத்தக் கறை

நிலத்தின் வெடிப்புகள்
நீர்த்துப் போனது
பால் வார்த்த மழை

வாகனப் பயணம்
கிழிபடும் காற்று
கரை ஒதுங்கும் கண்ணீர்

இருட்டு மேகம்
இடியோடு பெய்யும் மழை
குருடாய் சூரியன்

ரத்தினக் கம்பள
வரவேற்பு. . . .
கட்டாந்தரையும் களவாட உலகமயம்

தீப ஒளியில்
தெளிந்தது இரவு
மனசு மட்டும் குருடாய்

காற்றின் அவசரத்திற்கேற்ப
பாட்டுப் பாடும் மரங்கள்
வேர்களுக்கும் தாலாட்டு

பசியோடு குருவிகள்
விதை தேடும்
நிலங்கள்

ஐயனாருக்குத் தெரியாமலே
கத்தியின் மீது ரத்தம்
பக்தர்களின் காணிக்கை

உப்புக்கரிக்கும் கடலில்
சூரிய உதயம்
வெளிச்சத்தில் கண்கள்

குளம் முழுதும் நிலவு
சிரித்து விளையாடும்
தாமரைகள்

பனிக்குடம் உடைந்து
குழந்தை சிரித்தது
மண்ணின் பிரசவம்

ஆண்டனா இன்றி
டிவி சேனல்கள்
பறவைகள் காணவில்லை

நீரின்றி அமையாது உலகம்
நிலம் முழுவதும் கலகம்
பச்சை வயல் தேடி

தீண்டாமை ஒழித்து
எல்லோர் வீட்டிலும்
தீண்டும் பொங்கல் - நெல்

சிறகு விரித்து
பாதுகாக்கும் குழந்தை
கோழியின் மனித நேயம்

நெஞ்சில் இன்னும்
எரியும் வெண்மணித் தீ
நிலப்பசி தீர்க்காமல் அரசு

எரியும் குடிசைக்குள் மனிதர்கள்
காட்டு மிராண்டிகளின் தீவட்டி
கருகும் நிலத்தின் வேர்கள்

சுற்றிலும் பக்தர்கள் கூட்டம்
தனியாக
கர்ப்ப கிரகத்தில் சாமி

நிலப் பிரபுத்துவ வேர்
சுரண்டும் வர்க்கம்
சூழ்ச்சியுடன் காக்கும் அரசு

நெற்கதிர் மாண்ட
சோழ மண்டலம்
கைதான காவிரி

வயல் நடுவில்
வெட்டிக் கொலை
வேர் நிலத்தில் கண்ணீர்

நிலச்சீர்திருத்த சட்டம்
பிரபுக்கள் குவிந்தனர்
உழைத்தவனின் துண்டுநிலமும் பறிமுதல்

வெறியாட்ட சிகரம்
வெண்மணி நெருப்பு
வேர் பிடிக்காமல் நிலம்

தேச இருட்டில் கருகிய
வெண்மணி பிணங்கள்
தொடரும் சுதந்திர தாகம்

பிஞ்சுப் பாதங்கள்
கட்டை விரல் சூப்பிப் பசியாற
தடையாய் பட்டாம் பூச்சி

சாலை முழுவதும்
பயண ஊர்திகள்
வேகத் தடையில் எருமை

கோலம் அழித்து
குழந்தை எழுதும்
எச்சில் கவிதை

தொட்டில் சங்கிலி
இசையுடன் தாயின் ஞாபகத்தில்
தூங்கும் குழந்தை

மாட்டுத் தொழுவத்தில்
கன்றின் ஈரம்
பிரசவப் பசியாறும் பசு

பூக்களை ரசித்தபடி
வண்ணத்துப் பூச்சியிடம் சென்றேன்
தலையாட்டும் பூவில் சிறகின் ஓவியம்

கவரி வீசும் மரம்
மழையில் அடக்கம்
குழந்தை கனவுடன் காகிதக்கப்பல்.

பக(ட்டு)ல் நிலம்
சேரியில் தீண்டியது
காமம்

கரம்பு மேயும் மாடுகள்
வரம்பு மீறியது
பயிர் நிலம் பாழ்

வானவில் மறைத்த
மின் கம்பிகள்
வெளிச்சம் ரசிக்கும் மானுடம்

உருகும் தார்
கருகும் மேகம்
கொதிக்குதே மழை

ரகசிய வாழ்க்கை
ரணங்களோடு பெண்கள்
மிரட்டும் துறவி

விடிந்தும்
சூரியனை மறைக்கும் மேகம்
தரை முழுக்கப் பனி

வண்டிகள் போட்ட சாலைகள்
மனிதர்கள் பயணம்
தண்டவாளக் கோடுகளில் நிலம்

நாற்று நட்டவர்கள்
புகையில் சிக்கினார்கள்
அதிகாலைப் பனி

பெண்ணின் கூந்தலில்
இடம் மாறியது பூ
சென்ற இடமெல்லாம் வாசம்

வேலை கேட்டு
வீட்டு அலமாரியில்
மழையின்றி வாடும் குடை

ஓயாத போராட்டம்
தெருவிளக்கில் உதிர்கிறது
ஈசல்களின் சிறகுகள்

சூரியனை எழுப்பவா?
நிலவைத் தூங்கவைக்கவா?
வேகமாய் மேகப் பயணம்

தொழிலாளியின் ரத்தம்
சூடாகவும் . . . குளிரவும்...
அலறிக் கொண்டிருக்கும் ஆலைச்சங்கு